தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993, மார்ச் 29, திங்கட்கிழமை.

பங்குனி 16, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண்."

பகைவர்கள் முற்றுகையிட்டாலும், முற்றுகையிடாமல் போரிட்டாலும், வஞ்சனையால் எதிர்த்தாலும் அவர்களால் கைப்பற்ற முடியாமல் இருப்பதே கோட்டையாகும்.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

1. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். எடுத்துக் கொள்கிறேன் என்று ஏற்கெனவே உங்களுக்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சென்ற செய்வாய்க்கிழமை முடியாமல் இருந்த அலுவல்களை முடிப்பதற்கு இன்று கேள்வி நேரத்தையே நிறுத்தி வைத்திருக்கிறோம். எனவே இந்த நேரத்தில் மற்ற விவாதங்களுக்குச் செல்வதற்கு வகையில்லை. நாளையதினம் எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்). திரு. பரிதி இளம்வழுதி, திரு. பண்ருட்டி இராமசசந்திரன், திரு. தம்புசாமி, திரு. பழனிசாமி ஆகியோர் கோவையில் நடந்த சம்பவம் பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, சென்ற செவ்வாய்க்கிழமை முடியாமல் இருந்த அலுவல்களை எடுத்துக் கொள்வதற்காக இன்றையதினம் கேள்வி நேரத்தையே ஒரு தீர்மானத்தின் மூலம் நிறுத்தி வைத்து இருக்கிறோம். எனவே நாளையதினம் உங்களுடைய பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

1993 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்புச்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 5/1993) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1993). மாண்புமிகு நிதியமைச்சர். அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1993) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.